DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 23/2020 |
| Deposition of Witness for | : | P.W.3 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கலைச்செல்வன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.04.2025

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் தேவகோட்டை தாலுகா, காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டதின் பேரில் நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்கள் காவல் நிலையத்திலிருந்து எடுத்து வரச்சொல்லப்பட்ட அனைத்து ஆவணங்களையும் எடுத்து வந்துள்ளேன். குற்ற எண் 241/2018 ற்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

குற்ற எண்.241/2018 ற்கான முதல் தகவல் அறிக்கையில் TN 63 N 1418 என்ற எண் கொண்ட அரசு டவுன் பஸ்ஸின் ஓட்டுநர் மீது புகார் கொடுக்கப்பட்டு அதன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதேபோன்று குற்ற இறுதி அறிக்கையில் விபத்தில் இறந்த நபர் சுந்தரம் என்பவர் நகர்ந்து கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து கவனக்குறைவாக இறங்கி விழுந்ததில் தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்துள்ளார் என்றும், பஸ்ஸின் ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்றும் தெரியவருவதால் இந்த வழக்கின் புலன் விசாரணையை இத்துடன் முடித்து காயம்பட்ட நபர் நகர்ந்த பஸ்ஸில் இறங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று முடிவு செய்து இந்த வழக்கினை எப்.ஏ.டி என்று முடிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். எல்லா சாட்சிகளையும் முறையாக விசாரித்துதான் எப்.ஏ.டி தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.